# நிதி முகாமையாளரின் அறிக்கை
# உரித்துவ நிதியம்

**அன்பார்ந்த முதலீட்டாளருக்கு,**

30 செப்டம்பர் 2023 இல் நிறைவடைந்த காலத்திற்கான கொம்ட்ரஸ்ட் ஈக்கியூட்டி நிதியத்தின் அரையாண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

**பொருளாதார மீளாய்வும் கண்ணோட்டமும்**

இலங்கையின் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடமாக 2023 இன் 2ஆம் காலாண்டில் -3.1%[1] ஆல் சுருங்கியதுடன் இது கடந்த வருடத்தில் அதே காலப்பகுதியில் வருடத்திலிருந்து வருடமாக -7.4%[1] வீழ்ச்சியினைக் கண்டிருந்தது. இதன் விளைவாக 2023 இன் முதலாம் அரையாண்டில் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடமாக -7.9% ஆல் சுருக்கமடைந்தது. 2023 இன் 2ஆம் காலாண்டின்போது கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் முறையே வருடத்திலிருந்து வருடம் -11.5%[1] மற்றும் -0.8%[1] ஆல் சுருக்கமடைந்ததுடன் வேளாண்மைத் துறையானது வருடத்திலிருந்து வருடம் ஒரு நேர்மறையான வளர்ச்சியாக +3.6%[1] இனை பதிவுசெய்தது. மார்ச் 2023 இல் பிரசுரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் (ச.நா.நி.) பணியாளர் அறிக்கையின் பிரகாரம் இலங்கையின் பொருளாதாரமானது 2023 இல் வருடத்திலிருந்து வருடம் - -3.0% வீழ்ச்சியினை பதிவுசெய்யும் எனவும் 2024 இன் இறுதியில் +1.5% வளர்ச்சியினை பதிவுசெய்யும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. 2023 இன் 2ஆம் அரையாண்டில் வேளாண்மைத் துறையிலான வளர்ச்சி மற்றும் மேம்பட்ட சுற்றுலாத்துறை உழைப்புகளினால் துணையளிக்கப்பட்டு மற்றும் குறைவான அடிப்படை விளைவிலிருந்து பொருளாதாரமானது 2023 இன் 2ஆம் அரையாண்டில் மீட்சியடையும் என நாம் எதிர்பார்க்கின்றோம். மேலும், கொள்கை வட்டி வீதங்களை தளர்த்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் (இ.ம.வ.) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வீழ்ச்சியடையும் கொள்கை வட்டி வீதங்களுக்கு ஏற்ப சந்தை கடன் வழங்கல் வட்டி வீதங்களிலான வீழ்ச்சி என்பன மத்திய காலத்தில் தனியார் கடனினால் நடத்திச் செல்லப்படும் நுகர்வு மற்றும் முதலீடுகளுக்கான கேள்வியினை படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வணிகச்சரக்கு ஏற்றுமதி துறைக்கான நெருங்கிய காலக் கண்ணோட்டமானது சவாலாகக் காணப்படுகின்ற போதிலும் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கைத் தொழிலாளர்களிடமிருந்தான திடமான மற்றும் வளர்ச்சியடையும் பணமனுப்பல்கள் வெளிவாரித் துறைக்கு துணையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், ச.நா.நி. இடமிருந்து (அதன் சபையினால் இத்திட்டத்தின் முதலாம் மீளாய்வின் வெற்றிகரமான நிறைவினைத் தொடர்ந்து) பெறப்பட்ட நிதியளிப்பின் இரண்டாம் பகுதி மற்றும் ஏனைய பலதரப்பு கடன் வழங்கல் பங்காளிகள், 2023 இன் இறுதியில் நாணயத்திலான ஏதேனும் கீழிறக்கல் அழுத்தங்களை தணிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இ.ம.வ. 1 ஜூன் 2023 முதல் கொள்கை வட்டி வீதங்களை குறைப்பதன் மூலம் அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை தளர்த்துவதற்கு ஆரம்பித்தது. நிலையியல் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலையியல் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR) என்பன முறையே 13.00%[2] மற்றும் 14.00%[2] ஆகக் காணப்பட்டன. அதன் பின்னர், இ.ம.வ. ஜூலை மற்றும் ஒக்டோபர் மாதங்களில் இடம்பெற்ற நாணயக் கொள்கை கூட்டங்களில் வட்டி வீதங்கள் 300 அடிப்படை புள்ளிகளினால் மேலும் குறைக்கப்பட்டன. நாணயச் சபையானது பணவீக்கம் ஒரு குறைவடையும் பாதையில் அதன் இலக்கு நோக்கி செல்கின்றது எனவும் அதிகரித்த தனியார் கடன் பாய்ச்சல்களினூடாக பொருளாதாரத்தில் ஒரு மீளெழுச்சியினை தூண்டுவதற்கு நாணயக் கொள்கையினைத் தளர்த்தும் தேவை காணப்படுகின்றது எனும் கருத்தைக் கொண்டுள்ளது.

3 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் திறைசேரி உண்டியல்களுக்கான விளைவுகள் செப்டம்பர் 2023 இல் முறையே 17.42%[3], 15.13%[3] மற்றும் 13.30%[3] ஆகக் காணப்பட்டன. அரசாங்கப் பிணையங்களின் விளைவிலான வீழ்ச்சிக்கேற்ப, சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டு நாணய நிலைமைகளிலான ஓர் மேம்பாடு மற்றும் வங்கியல் துறை திரவத்தன்மைகளுக்கு மத்தியில் AWPLR செப்டம்பரில் 14.67%[4] ஆக காணப்பட்டது.

[1] மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், தேசிய கணக்குகள் 2023Q2

[2] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/press/pr/press_20230601_Monetary_Policy_Review_No_4_2023_e1.pdf

[3] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/press/pr/press_20230926_treasury_bill_auction_held_on_26_september_2023_e.pdf

[4] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/statistics/wei/WEI_20230927_e.pdf

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் (CCPI) அளவிடப்படும் புள்ளியிலிருந்து புள்ளிப் பணவீக்கமானது செப்டம்பர் 2023 இல் 1.3%[5] ஆக நிறைவடைந்தது. உணவுப் பணவீக்கமானது வருடத்திலிருந்து வருடம் -5.2%[6] வீழ்ச்சியடைந்தவேளை வீடமைப்பு, தண்ணீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனையவை மற்றும் ஆடை மற்றும் பாதணி போன்ற துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புகளின் காரணமாக உணவல்லாத பணவீக்கமானது 4.7%[6] ஆக அதிகரித்தது. அதேசமயம், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியினால் (NCPI) அளவிடப்படும் பணவீக்கமானது செப்டம்பர் 2023 இல் புள்ளியிலிருந்த புள்ளி அடிப்படையில் 0.8%[7] ஆக நிறைவடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் அளவிடப்படும் தலைப்பு பணவீக்கமானது இலங்கை மத்திய வங்கியின் இலக்கு வரம்பிலும் குறைவாகக் காணப்பட்டபோதிலும், உலகளாவிய எரிசக்தி விலைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் வியாபித்திருக்கும் நிச்சயமற்றதன்மைகளினால் தலைப்பு பணவீக்கமானது அதன் இலக்கு வரம்பினை நெருங்கிய காலத்தில் விஞ்சலாம் என்ற சாத்தியத்தினை நாணயச் சபையானது ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேசமயம், செப்டம்பர் 2023 இறுதியில் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் அமெரிக்க டொலர்கள் 3.5 பில்லியன்[8] என மதிப்பிடப்பட்டதுடன், இது அமெரிக்க டொலர்கள் 1.4 பில்லியன் நிகரான பீபள்ஸ் பேங்க் ஒவ் சைனாவிடமிருந்தான பரிமாற்று வசதிகளையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வசதியானது பயன்பாட்டிலான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். ச.நா.நி. மற்றும் ஏனைய பலதரப்பு கடன் வழங்கல் பங்காளிகளிடமிருந்தான புதிய நிதியளிப்புகளினால் துணையளிக்கப்பட்டு உடனடி நெருங்கிய காலத்தில் இலங்கை ரூபாயானது ஸ்திரமாக காணப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம். எவ்வாறாயினும், நாணயக் கொள்கை தளர்த்தல், இறக்குமதி கட்டுப்பாடுகளிலான தளர்வுகள் மற்றும் வெளிநாட்டு கடன் சேவையாற்றலின் மீள்தொடக்கம் என்பன மத்திய காலத்தில் இலங்கை ரூபாயில் அழுத்தத்தினை நெருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செப்டம்பர் 2023 இன் இறுதியில் இலங்கை ரூபாயானது வருடத்திலிருந்து வருட அடிப்படையில் +10.6% ஆல் பெறுமதி உயர்வடைந்து ஒரு அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபா 324.5 ஆக காணப்பட்டது.

**சந்தை மீளாய்வு**

வருடத்தின் ஆரம்பத்திலிருந்து இதுவரைக்கும், அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (ASPI) +33.5% ஆல் அதிகரித்தவேளை S&P SL20 சுட்டியானது +21.3% ஆல் அதிகரித்தது. மார்ச் 2023 இல் ச.நா.நி. இன் சபையினால் நீடிக்கப்பட்ட நிதியளித்தல் வசதி ஏற்பாடுகளின் அங்கீகாரத்துடன் ஆரம்பத்தில் சந்தையானது முதலீட்டாளர் உணர்வில் ஒரு திருப்பத்தினை கண்டது. இதனைத் தொடர்ந்து ஜூன் 2023 இல் நாணயக் கொள்கை தளர்த்தல் சுற்றின் ஆரம்பம் மற்றும் அதே மாதத்தின் இறுதியில் உள்ளூர் கடன் மீள்கட்டமைப்பு வரைகூறுகளின் அறிவிப்பும் மேற்கொள்ளப்பட்டது. இவ்விரண்டு நிகழ்வுகளும், வட்டி வீதங்களின் இயல்பாக்கல் மற்றும் உரித்துவங்கள் குறைமதிப்பு என்பவற்றால், முதலீட்டாளர் பங்குபற்றலை மேலும் வினையூக்கமாக்கியது.

உள்ளூர் கடன்களது கவனிப்பு / மீட்கட்டமைப்பிலான தெளிவின் பின்னர் முதலீட்டாளர்கள், வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் முதலீடுகளை மேற்கொண்டார்கள். அதேசமயம், சுற்றுலா பயணிகளின் வருகையிலான ஒரு திடமான மேம்பாடு மற்றும் வீழ்ச்சியடையும் வட்டி வீதச் சூழ்நிலைகள் சுற்றுலா /நுகர்வு தொடர்பான கம்பனிகள் நோக்கி முதலீட்டாளர்களது கவனத்தை ஈர்த்தது.

[5] மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், CCPI இன் அசைவுகள், பக்கம் 01

[6] மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், உணவு மற்றும் உணவல்லாத பணவீக்கம், பக்கம் 01

[7] மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், NCPI இன் அசைவுகள், பக்கம் 01

[8] இலங்கை மத்திய வங்கி, வாராந்த பொருளாதார குறிகாட்டிகள் - 27 ஒக்டோபர், பக்கம் 15

**நிதியத்தின் செயற்திறன்**

செப்டம்பர் 2023 வரைக்குமான ஆறு மாதங்களில் CT CLSA உரித்துவ நிதியமானது, ASPI மற்றும் S&P SL20 சுட்டிகளின் அதிகரிப்பான முறையே +21.9% மற்றும் +19.2% ஆகியவற்றை விஞ்சி +27.0% ஆல் முன்னேற்றமடைந்தது. நிதியமானது அதன் முன்னிறுத்தத்தினை நிலைபேறுடைய உழைப்புகள் மற்றும் கட்டுப்பாடற்ற காசுப் பாய்ச்சல் உருவாக்கமுடைய அடிப்படை ரீதியாக வலுவான, குறைமதிப்பிடப்பட்ட, திரவத்தன்மையுடைய கம்பனிகளில் தொடர்ச்சியாக மேற்கொண்டது. 30 செப்டம்பர் 2023 இல் நிதியத்தின் உரித்துவத்திற்கான வெளிப்பாடு ரூபா 299 மில்லியனாகக் காணப்பட்டது. மீளாய்வுக் காலத்தின்போது, வரலாற்று ரீதியான குறைவான பெறுமதியிடல்கள் மற்றும் 2023 இன் 2 ஆம் அரைவாசியில் உழைப்புகளின் மீட்டலுக்கான சாத்தியத்தினை முன்னிட்டு வங்கித்துறையினைச் சார்ந்த கம்பனிகளுக்கான வெளிப்பாட்டினை நிதியம் அதிகரித்ததுடன், ''முதலீட்டுப் பொருட்கள்'' மற்றும் ''நுகர்வு நிலைத்து நிற்கக்கூடியவை மற்றும் ஆடை'' துறைகளிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட கம்பனிகளிலான வெளிப்பாடு அதிகரிக்கப்பட்டது. நிதியமானது நியாமாக விலையிடப்பட்ட மற்றும் நிலைபேறுடைய திடமான உழைப்புகள் /கட்டுப்பாடற்ற காசுப் பாய்ச்சல் வளர்ச்சியினை வெளிக்காட்டும் கம்பனிகளில் தொடர்ந்தும் முதலீடு செய்தது.

**CT CLSA உரித்துவ நிதியத்தின் செயற்திறன் எதிர் ASPI மற்றும் S&PSL20; மார்ச் 2023 – செப்டம்பர் 2023**

| | 1 மாதம் (%) | 3 மாதம் (%) | 6 மாதம் (%) |
|---|---|---|---|
| **கொம்ட்ரஸ்ட் உரித்துவ நிதியம்** | 2.3 | 22.2 | 27.0 |
| **ASPI** | 2.0 | 20.0 | 21.9 |
| **S&P SL20** | 2.1 | 17.8 | 19.2 |

**கண்ணோட்டம்**

பணவீக்கம் குறைவான ஒற்றை எண் மட்டங்களை எட்டியதுடன் பொருளாதாரமானது நிலைப்படுத்தலுக்கான அறிகுறிகளை காட்டியது. அதேசமயம், வழங்கல் பக்க கட்டுப்பாடுகள் மற்றும் 2022 இல் மக்களால் முகங்கொடுத்த பற்றாக்குறைகள் பெருமளவில் விளித்துரைக்கப்பட்டன. சுற்றுலாத்துறை உழைப்புகள் மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்கள் போன்ற முக்கிய அந்நிய செலாவணி மூலங்கள் மீட்சியடைந்தவேளை அந்நிய செலாவணி ஒதுக்கங்களை பாதுகாப்பதற்காக நடைமுறையிலிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் படிப்படியாக நீக்கப்பட்டன. உலகளாவிய இறுதிப் புகலிட கடனளிப்பவரிடமிருந்து புதிய நிதியளிப்பினை திறப்பதற்கு எதிர்பார்க்கும் ச.நா.நி. திட்டத்தின் முதலாம் மீளாய்வினை நிறைவுசெய்வதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மேலும், நாட்டின் வெளிவாரி கடனின் மீள்கட்டமைப்பில் பலதரப்பு மற்றும் தனியார் கடன் வழங்குநர்களுடன் ஒரு உடன்பாட்டினை எட்டுவதற்காக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றவண்ணமுள்ளன. பணவீக்கத்தின் தளர்த்தல் மற்றும் உள்ளூர் கடன் மீள்கட்டமைப்பு தற்போது நிறைவுசெய்யப்பட்டதுடன் சந்தை வட்டி வீதங்கள் அவற்றின் உச்சத்திலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளன. வட்டி வீதங்கள் தொடர்ந்தும் கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டதுடன், உரித்துவங்கள் மற்றும் கூட்டாண்மை கடன்கள் நோக்கி உள்ளூர் நிதிகள் பாய்ச்சப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் காலாண்டுகளில் புரள்வு மீட்சியடைந்து நிதிச் செலவுகளிலான அழுத்தம் தணிந்ததுடன் கூட்டாண்மைகளது உறுதியான இலாபகரத்தன்மையினை அறிக்கையிடுவதிலிருந்து உரித்துவங்கள் மேலும் நலனடைய உள்ளன. மேலும், பிராந்திய சந்தைகளுடன் ஒப்பிடும்போது உள்ளூர் உரித்துவங்களின் கவர்ச்சிகரமான பெறுமதியிடல்கள் மற்றும் ஒப்பீட்டளவில் திடமான இலங்கையின் பொருளாதார நிலைப்பாடானது வெளிநாட்டு நிதிப் பாய்ச்சல்களை கவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது பார்வையில், வீழ்ச்சியடையும் வட்டி வீதங்கள், பொருளாதார சூழல் /கூட்டாண்மை இலாபகரத்தன்மையிலான மீட்சி, கவர்ச்சிகரமான பெறுமதியிடல்கள் மற்றும் வரிப் பயனுறுதியான ஒரு சொத்து வகையாக உரித்துவம் காணப்படுகின்றமை என்பவற்றால் துணையளிக்கப்பட்டு அடுத்த 12 முதல் 18

மாதங்களில் உரித்துவங்கள் அதிக செயற்திறனுடன் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல்நோக்கிய பெறுமதியிடல் மீள் தரப்படுத்தலின் நலனை கைப்பற்றுவதற்காக நாம் உரித்துவங்களில் மிகைநிறையாக உள்ளதுடன் உறுதியான அடிப்படைகள் மற்றும் நெருங்கிய மத்திய காலத்தில் உழைப்பில் சாத்தியமான வளர்ச்சியினைக்கொண்ட தெரிவுசெய்யப்பட்ட கம்பனிகளில் எமது முதலீடுகளை முன்னிறுத்தம் செய்கின்றோம்.